# ஜனாதிபதிதேர்தலுக்குமுன்நாடாளுமன்றதேர்தல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை ரத்துச் செய்துவிட்டு, நாடாளுமன்ற எம். பிக்களின் மேலதிக வாக்குகள் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் விதமாக அரசியலமைப்பில் திருத்தம் செய்ய அரசு தீர்மானித்திருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்திருத்தத்திற்கு அங்கீகாரம் கிடைக்கும் பட்சத்தில் 1994ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் நடைபெறமாட்டாது.

1995ம் ஆண்டு நடைபெற

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 02 இதழ் 182

[illegible] புதன்கிழமை 18 — 8 — 1993

## கொழும்பில் கைதானோரில் 1000 தமிழர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பில் கைது செய்யப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்களில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மற்றும் கொழும்பு மகசீன் சிறைச்சாலைகளில் 800 பேரும் பொலிஸ் நிலையங்கள் மற்றும் தடுப்பு முகாம்களிலும் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பிலுள்ள பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் சந்தேகத்தின் பேரில் கைதான தமிழர்களில் நூற்றுக்கணக்கானோர் இன்ன

4ம் பக்கம் பார்க்க)

# போரைத் தீவிரப்படுத்த படை அணிகள் தொகையை அதிகரிக்க அரசு தீர்மானம்!

## தாக்குதல் பிரிவு நாற்பதாக உயர்வு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைத் தீவிரப் படுத்தும் நோக்குடன் ஸ்ரீலங்கா இராணுவத்தின் தாக்குதல் அணிகளின் தொகையை நாற்பதாக அதிகரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.**

தற்போது ஸ்ரீலங்கா இராணுவத்தில் 30 தாக்குதல் அணிகள் உள்ளன. இந்தத் தொகையை மேலும் பத்தால் அதிகரித்து மொத்தம் 40 தாக்குதல் அணிகளைத் தயார் நிலையில் வைத்திருப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சென்ற மாதம் மண்கிண்டி மலை இராணுவமுகாம் புலிகள் தாக்கியதில் பல இராணுவத்தினர் உயிரிழந்ததையடுத்தும் மற்றும் பெருமளவான ஆயுதங்களை புலிகள் கைப்பற்றிச் சென்றதை அடுத்தும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலாட் படையைச் சேர்ந்த 30 பட்டாலியன் குழுவில் சுமார் எண்பதாயிரம் இராணுவத்தினர் புலிகளுக்கு எதி

(4-ம் பக்கம் பார்க்க)

## போர்த்தளபாடம், துருப்புகள் யாழ். குடாவிற்கு நகர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவில் பாரிய இராணுவ நடவடிக்கையின் மேற்கொள்ளும் நோக்குடன் பெருமளவுபடையினர் போர்த்தளபாடங்களும் குவிக்கப் பட்டு வருவதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

இதற்கென பிற இடங்களிலிருந்து பெருமளவு துருப்புகள் யாழ். குடாவிற்கு நகர்த்தப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ். குடா வான்பரப்பில் ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்களும், ஹெலிகொப்டர்களும் சுற்றி

(4ம் பக்கம் பார்க்க)

## ராணுவ-அரசியல் நடவடிக்கை ஒருமித்து எடுக்கப்படும்?

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு வெற்றிகரமான முறையில் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் ஒருமித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேற்கொள்ளப்படவேண்டிய முடிவுகள்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாரிய தாக்குதலுக்கு கிழக்கில் பலத்த ஏற்பாடு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்துள்ளது.

இதன் பொருட்டு, கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் பலம் அதிகரிக்கப்பட உள்ளது. புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் 10 இராணுவத் தாக்குதல் அணிகளில், மேலதிகமான துருப்புக்களை அங்கு அனுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மன்னார், வவுனியாப் பகுதிகளில் உள்ள 3 இராணுவ முகாம்களில் இருந்து பெருந்தொகையான துருப்புக்களைக் கிழக்குப் பகுதிக்கு அனுப்பி வைக்க அரசு முடிவு செய்

(4ம் பக்கம் பார்க்க)

## தப்பியோடியவர்களுக்கு மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

இராணுவத்தைவிட்டு ஓடிய சிப்பாய்கள் அனைவரும் உடனே தமது சேவைக்கு சமூகமளிக்க வேண்டுமென இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சிசில் வைத்தியரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த சில வருடங்களில் சுமார் 5000 சிப்பாய்கள்வரை இராணுவ சேவையை கைவிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுள் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். வேறு சிலர் தலைமறைவாகி இருந்தவேளையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இ-ரி

## உன்னிச்சை மோதலில் இரு புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உன்னிச்சை குதம்பா காட்டுப் பகுதியில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதிர்பாராதவிதமாக மோதல் ஒன்று ஏற்பட்டது.

கடந்த சனிக்கிழமை மாலை ஓட்டத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த

(4ம் பக்கம் பார்க்க)

## காவலரண், விடுதிகள் மீது புலிகள் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பாடசாலையை அண்மித்த பகுதியிலுள்ள இராணுவ காவலரணில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்றுமுன்தினம் மாலை விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைத் தீர்விற்கு பேச்சுவார்த்தையே வழி

(கொழும்பு)

"இனப் பிரச்னைத் தீர்வுக்குப் பேச்சுவார்த்தையைத் தவிர வேறு வழியில்லை. பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்கள் வன்முறை நிலைப்பாடுகள் பயன் தராது என்பதை உணர வேண்டும்." இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான சிறிசேன கூரே தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பலவத்த முகாம் கைதிகள் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

பலவத்த தடுப்பு முகாமில் கடந்த ஐந்து நாட்களாக கைதிகள் மேற்கொண்டுவந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தடுப்பு முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் கைதிகள் விடயத்தில் தலையிட்டதைத் தொடர்ந்து இந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டதாக கூறப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

# காலாவதியான விவசாயக் கடனை கழிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காலாவதியான விவசாயக் கடன்களை தென்னிலங்கையில் கழித்தது போன்று எமது பகுதியில் உள்ள காலாவதியான விவசாயக் கடன்களை அரசாங்கம் கழித்துவிட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்கண்ட தீர்மானம் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்களுக்கிடையில் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல், நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில்;-

"எமது மாவட்டத்துக்குத் தேவையான நெல்லை உற்பத்தி செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முயற்சி மேற்கொள்ளவேண்டும். அதற்கு உரவகைகள், மருந்துவகைகள், விதை நெல் போன்றவற்றை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. தொடர்ந்தும் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு கால்நடைகளுக்குத் தேவையான தீன் வகைகள், சைக்கிள் டியூப் போன்ற பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. விரைவில் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களுக்கு இப்பொருட்களை வழங்க இருக்கின்றோம்'' என்றார்.

யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் உதவிக் கூட்டுறவு ஆணையாளர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர், யாழ். மாவட்ட கூட்டுறவுச்சங்கங்கள் மற்றும் பலரும் உரையாற்றினர்கள். [ம-இ]

## ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி கோவிலின் வருடாந்த உற்சவம் நாளை 19ம் திகதி வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் இடம்பெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையும், தீர்த்தத் திருவிழா 30ம் திகதி திங்கட்கிழமை காலையும் இடம்பெறும் -154


## வரி விளம்பரம்

### புத்தகங்கள் விற்பனை

பிரார்த்தனை மாலை (தோத்திரத்திரட்டு) இந்திய நாவல்கள் டிக்சனெறிகள் ஆங்கில தமிழ் களஞ்சியம் (மற்றும் டிக்செனெறி) மல்லிகை நீ ஸ்ரீ சாந்தி புத்தகசாலை நல்லூர். (எ-3277)

### கம்பியூட்டர் கல்வி

Basic, Lotus, Shorthand-Typing புதிய பிரிவுகள் 18-08-93 ஆரம்பமாகின்றன. குறைந்த கட்டணம், சிறந்த பயிற்சி. பயிற்சி முடிவில் சான்றிதழ். School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. இ-409

### கண்ணொளி

கண்ணொளி துலங்கிட கரிசலாங்கண்ணி (கையாந்தகரை) தினமும் சாப்பிடுவோம். மிளகு வைத்து நீல சோப் மேலுறை/சுவைத்தால் பக்கற் பத்து (10) சேர்ப்பித்து ஒரு பரிசு பெறுங்கள். "மிக்கைத்" (எ-3444)

### தேவை

பத்திரிகை ஸ்தாபனத்தில் கடமை புரியக்கூடிய அச்சுக் கோப்பாளர் தேவை. தகுதியும், அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி; 25-8-93 தொடர்பு:- விளம்பர இலக்கம்: 3351, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (எ-3351)

### A/L பௌதிகவியல் 94/95

தனிப்பட்ட முறையில் பிரத்தியேகமாக பௌதிகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம் ஏராளமான பயிற்சிகளோடு சிறப்பாகப் பல வருடம் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் கற்பிக்கப்படும். பெற்றோர் சந்திப்பு விரும்பத்தக்கது. R. பாலசுப்பிரமணியம் B. Sc. (Cey) Dip-in-Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி 411)


## சிவாசார்யமணி சைவ உலகுக்கு சொந்தமானவர்

(யாழ்ப்பாணம்)

"சிவாசார்யமணி சிவஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்கள் அந்தணர் குலதிலகமாக விளங்கி வருவது யாவரும் அறிந்தது. குருக்கள் அவர்களது சேவை இணுவிலுக்கு மட்டும் உரியதல்ல. சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் சைவ உலகுக்கே சொந்தமானவர்.

இணுவில் - கோண்டாவில் காரைக்கால் சிவன்கோயில் திருக்கல்யாண விழாவன்று சிவாசார்யமணி சிவஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்களின் சேவையைப் பாராட்டி இணுவில் பொதுமக்கள் சார்பில் எடுக்கப்பெற்ற விழாவில் உரையாற்றிய இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் சைவப்புலவர் சு. செல்லத்துரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ கா. மகாதேவக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. செ. மதியாபரணம் பாராட்டுப் பத்திரத்தை வழங்க காரைக்கால் சிவாலயத்தின் சார்பில் திரு. சோ. உலகேந்திரன் சபாரத்தினக் குருக்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்

# அ. புர பல்கலைக்கழக கல்லூரியின் தமிழ் பிரிவை மூடவேண்டாம்

(கொழும்பு)

அநுராதபுரம் புளியங்குளத்தில் இயங்கிவரும் பல்கலைக்கழக இணைப்புக்கல்லூரியின் தமிழ்ப் பிரிவை மூடிவிட அரசு ஆலோசித்துள்ளதாக தெரிய வருகிறது.

புதிய கல்வியாண்டில் மாணவர்கள் தமிழ் பிரிவுக்கு அனுமதிக்கப்படவில்லை. ஏற்கனவே இக்கல்லூரியில் 40 தமிழ் மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள்

இக்கல்லூரியில் தமிழ் பிரிவை மூடவேண்டாமென அமைச்சர் ஹமீத்திற்கு பல தரப்பிலுமிருந்து அவசர கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. இப்பகுதியில் சுமார் 60,000 முஸ்லிம்களும் பெருமளவு தமிழரும் வாழ்ந்து வருவதால் இக்கல்லூரியில் தொடர்ந்தும் தமிழ் பிரிவு இயங்க வேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. (இ)

## ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு இந்தியாவிடம் யாழ் இந்துசமயப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது

அந்த கோரிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இலங்கையில் தொடர்ந்தும் போர்ச் சூழ்நிலை நிலவுவதாலும் தமிழர்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் நடமாட முடியாதிருப்பதனாலும் இராணுவ வெடிப்பிடி, பொருளாதாரத் தடை ஆகியவற்றால் தமிழர்கள் துன்பப்படுவதினாலும், அடைக்கலம் கோரி இந்தியாவிற்கு வந்துள்ள ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாமென்று இந்திய அரசையும், தமிழ்நாடு முதலமைச்சரையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற இந்துசமய பேரவையின் செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கை அடங்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## வாதுவவில் தபால் பொதிகள் வரும்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்தில் தற்பொழுது தரித்துநிற்கும் வாதுவ கப்பலில் யாழ் மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் ஏற்றப்படுவதாக ஐ. சி. ஆர். சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பல் பொருட்களை ஏற்றிக்கொண்டு இன்னும் சில தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பலில் யாழ் மாவட்டத்துக்குரிய தபால் பொதிகளும் எடுத்து வரப்படவுள்ளன. (162)

## புலமைப்பரிசில் பரீட்சை மாணவர் 18 மைல்களுக்கு சென்று பரீட்சை எழுதுனர்கள்

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பரீட்சை நிலையங்களில் ஏற்பட்ட குளறுபடியினால் பெரும் கஷ்டத்திற்குள்ளானார்கள்.

மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் தமக்கு அருகாமையிலுள்ள இரு பரீட்சை நிலையங்களைக் கடந்து சுமார் 18 மைல்களுக்கப்பாலுள்ள செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்துக்குப் பரீட்சை எழுதச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது

அதேபோல் மற்றைய பாடசாலை மாணவர்களும் அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தைக் கடந்து தூரத்திலுள்ள பரீட்சை நிலையம் சென்று பரீட்சை எழுத வேண்டிய

(4-ம் பக்கம் பார்க்க)

## 2001ம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை ஒரு கோடி 96 லட்சம்

(கொழும்பு)

2001 ஆண்டுக்குள் இலங்கையின் சனத்தொகை ஒருகோடி 96 லட்சமாக அதிகரிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

1992ம் ஆண்டு முதல் நாட்டின் சனத்தொகை வருடாந்தோறும் 10 லட்சமாக அதிகரிக்கும் என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் மனிதவள அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.

2040ம் ஆண்டுகளின் போது இலங்கையின் சனத்தொகை இரண்டு கோடி 70 லட்சமாக இருக்கும்.

கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி கணிசமான அளவு குறைந்துள்ளது. -இ

## படிவங்கள் வந்துள்ளன

(மானிப்பாய்)

1954ம் ஆண்டின் பின் பிறந்தவர்களுக்கு எழுதி வழங்கப்படும் இருபக்க பிறப்பு அத்தாட்சிப்பத்திரப் படிவங்கள் கொழும்பிலிருந்து யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்திற்கு வந்துசேர்ந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து சில வாரங்களாக கையேற்கப்படாமல் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 23ந் திகதி திங்கள் முதல் மீண்டும் ஏற்றுக் கொள்ளப்படுமென யாழ். மேலதிக மாவட்ட பதிவாளர் திரு கா. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (71)


### நீங்கள் பெறுமதிமிக்க தங்கப் பரிசில்களை வென்றெடுக்க இதோ ஒரு அரிய சந்தர்ப்பம்!!

15-8-93 ற்கும் 30-12-93 ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 15,000 (பதினையாயிரம்) வெறுமையான போத்தல்களை ஒப்படைக்கும் போது அதற்குரிய பணத்தைப் பெறுவதுடன் தங்கப் பரிசில்களையும் மேலதிகமாக பெறுவீர்கள். போட்டிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் போத்தல்களின் விபரம்:-

1. ஜாம்/ புரோடினெக்ஸ்
2. பியர்/ நெல்லி 625m. l
3. கோடியல் (கறுப்பு/ வெள்ளை) (750m. l)
4. மோல்டோவா சிறியது) மூடியுடன்
5. போன்விட்டா (சிறியது) மூடியுடன்
6. ஹார்லிக்ஸ்/ வீவா (சிறியது) மூடியுடன்
7. சோஸ் (325m.l)

இப்போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு இன்றே எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**ரேஸ்ட் லைன் இண்டஸ்ரீஸ் (தனி) லிமிடெற்**
**14, சீனியர் ஒழுங்கை**
**யாழ்ப்பாணம்**

முக்கிய குறிப்பு:
15,000 போத்தல்களை சேர்க்கும் ஒவ்வொருவருக்கும் பரிசில்கள் உண்டு.

(எ-3347)

### SCIENCE ACADAMY

நெல்லியடி

94 A/L [மீட்டல் வினாவிடை வகுப்புகள்]

விலங்கியல் | சுபசீலன்

ஆரம்பம்: 21-08-1993

(22-08-93 திகதியுடன் அனுமதிகள் யாவும் நிறுத்தப்படும்)

(எ 3352)

**மணிவாக்கு**

ஒரு பக்தன் எப்பொழுதும் கடவுளுடன் கலந்திருக்கிறான்.

— மாகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## தாலாட்டா? மயங்கார்!

இலங்கை இனப்பிரச்னையில் ஐ. நா தலையிட காரணமில்லை என்பதை விளக்கி ஜனாதிபதி அளித்த பதிலின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

வடகிழக்குப் பிரச்னையல்ல! அது ஒரு பயங்கரவாதப் பிரச்னையே. ஐ. நா. தலையிடக் காரணமில்லை என ஜனாதிபதியின் செயலாளர் நோபல் பரிசு பெற்றோரின் ஒத்துழைப்புக் கழகத்திற்கு கடிதம் எழுதியுள்ளார்.

நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகளை கொலைகளை கொள்ளைகளை பயங்கரவாதம் என்ற பட்டியலில் அரசு சேர்க்குமா?

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசியற் பிரச்னைக்குத் தீர்வுகாணும் என்ற நம்பிக்கையும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட்டமேசை மாநாடுகள், தெரிவுக்குழுக்கள் போன்ற பலவற்றின் இழுத்தடிப்பு வேலைகளை உலகம் கவனிக்கவில்லை என்று தமக்குள் எண்ணி மகிழ்ச்சி அடைகிறார்களா அரச தரப்பினர்!

தெரிவுக்குழுவின் இன்றைய நிலை என்ன? தமிழ் அரசியற் குழுக்கள் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறிவிட்டன. அமைச்சராக உள்ள தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசே தெரிவுக்குழுவில் நம்பிக்கை இழந்து வெளியேறிய சங்கதியை மூடிமறைத்து விடலாமா?

சேடம் இழுக்கும் அந்தக்குழுவின் செயற்பாட்டிலா மக்களை உலகநாடுகளை நம்பிக்கை வைக்கும்படி ஜனாதிபதி கூறுகிறார்?

அரசியற் கட்சிகளிடையே கிட்டத்தட்ட முழுமையான உடன்பாடு உள்ளதாகவும் அரசு கூறுகிறது.

உடன்பாடு என்ன? வடகிழக்கைப் பிரிக்க உடன்பாடு. ஒரே இனத்தைச்சேர்ந்த கட்சிகளின் உடன்பாடு என்பதை உலகம் உணராதா?

சமஷ்டி அரசியல் முறைக்கு உடன்பாடு காணப்பட்டது என்று கூறப்பட்டது. ஆனால் ஸ்ரீமா அம்மையார் சுதந்திரக்கட்சி அதனை ஏற்கவில்லை என மறுத்ததைத்தான் மக்கள் மறப்பார்களா?

தனது தாலாட்டின் பழைய பயங்கரவாதப் பல்லவியில் உலகம் நித்திரையாகிவிடும் என்ற கனவைக் கலைக்கும் ஓர் செய்தி வந்துள்ளது.

நோபல் பரிசுபெற்ற குழுவினர் விழிப்பாக உள்ளார்கள். உதவி வழங்கும் நாடுகள் மூலம் ஐ. நா. தலையீட்டிற்குமுயற்சி எடுக்கிறார்கள்!

# விடுதலை புலிகளின் போக்கை நிர்ணயிப்பது கடினமாயுள்ளது

### - இராணுவ பேச்சாளர் கூறுகிறார் -

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் போக்கை நிர்ணயிப்பது மிகக் கடினமாயிருப்பதாக கொழும்பில் நேற்று இராணுவப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். புலிகளின் பாதுகாப்பில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் எச். எவ். ஜி. பெரேராவின் விடுதலை குறித்தும் கருத்து வெளியிடுகையிலேயே இராணுவப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

கைதிகள் விடுதலைக்கு நிபந்தனை விதிக்கும் புலிகள் அவர்களில் பலரை மனிதாபிமான அடிப்படையில் விடுவித்திருப்பது நல்லதொரு செயலாகுமென இராணுவ வட்டாரங்களும் தெரிவித்துள்ளன. (க-சி)

# மேலும் 1,130 அகதிகள் திருமலை வருகை

(சென்னை)

தமிழகத்தில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் 1,130 பேர் நேற்று முன்தினம் சென்னையிலிருந்து திருமலை நோக்கிப் புறப்பட்டனர்.

10 மாத இடைவெளிக்குப் பின் கடந்த வியாழக்கிழமை அகதிகளைத் திருப்பியனுப்பும் பணி ஆரம்பமானதைத் தொடர்ந்தே மேற்படி இலங்கைத் தமிழ் அகதிகளும் அனுப்பப்பட்டதாக சென்னை தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-கி)

## நோயாளர் நிலத்தில் உட்காரும் நிலைமை

(யாழ்ப்பாணம்)

போதிய தளபாட வசதிகள் இன்மையால் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் நோயாளர்கள் நிலத்தில் உட்காரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

கிளினிக் நடைபெறும் நாட்களில் இவ்வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் வரிசையாக இருப்பதற்குரிய வாங்குகள் பற்றாக்குறை காரணமாக நிலத்தில் உட்காருவதைக் காணமுடிகிறது.

கர்ப்பிணிகள், குழந்தைகளுடன் வந்த பெற்றோர், குழந்தைகள் சகல நோயாளிகளும் இவ்வாறு கஷ்டப்படுகிறார்கள். (161)

## அம்பாறையில் ஆறு புதிய பிர. செயலகங்கள்

(மானிப்பாய்)

அம்பாறை மாவட்டத்தில் மேலும் 6 புதிய பிரதேச செயலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இப்புதிய செயலகங்கள் இம்மாதம் முதல் எதிர்வரும் செப்டம்பர் 2ந் திகதி வரை பொத்துவில், தமண, லாவுகல, கல்முனை, திருக்கோவில், ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்படவுள்ளன. (71)

## பொது எழுதுநர்சேவை போட்டிப் பரீட்சை 28ம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுநர்சேவையின் அதிசிறப்பு வகுப்பு உயர்ச்சிக்கான யாழ்மாவட்டப்போட்டியாளர்களுக்கான விசேட போட்டிப்பரீட்சை இம்மாதம் 28-ம்திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள போட்டியாளர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றியபோதும் போக்குவரத்து வசதியற்ற காரணத்தால் பங்குபற்றாதவர்களுக்கே இவ்விசேடபோட்டிப்பரீட்சை நடைபெறவுள்ளது.

கடந்தமாதம் இப்பரீட்சை நடைபெறுவதாக இருந்தபோதும் திகதி பின்போடப்பட்டிருந்த காரணத்தால் நடைபெறாமல் போயிற்று.

இப்பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து அனேக போட்டியாளர்கள் பங்குபற்றுவார்கள் என்று தெரியவருகிறது. (161)

## 1755 அடையாள அட்டை அனுப்பப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுடைய சுமார் 1755 அடையாள அட்டைகள் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றுள் தொலைந்துபோன அடையாள அட்டைகளுக்குப் பதிலாக வழங்கப்பட்ட அடையாள அட்டைகளே கூடுதலானவையாகும்.

அத்துடன் திருத்தம் செய்தலுக்கும், முதன் முறை விண்ணப்பித்தவர்களுக்கும், புதுப்பித்தலுக்கும் பாடசாலைகளுக்கு வழங்குவதற்குமெனச் சகைகரத்தைச் சேர்ந்த அடையாள அட்டைகளும் அடங்குகின்றன.

கொழும்பிலிருந்து அடுத்து வரும் கப்பலில் இவை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்லப்படவிருப்பதாக மேலும் இத்தகவல்கள் மூலம் தெரியவருகின்றது. -161

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணி மண்டப முன்றலில் இன்று மாலை 6 மணிக்கு இடம்பெறும் தெய்வீக இசையரங்கில் கவிஞர் சோ. பத்மநாதனின் சொற்பொழிவும், பொன். சுந்தரலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும். வயலின் ஆர். இராதாகிருஷ்ணன், மிருதங்கம் எஸ் மகேந்திரன்.

நாளை மாலை 6 மணிக்கு கே. ஆர். நடராஜனின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறுகின்றது. வயலின் ஆர். இராதாகிருஷ்ணன், மிருதங்கம் எஸ். சிதம்பரநாதன்.

தம்புரா, கடம், கெஞ்சிரா, மோர்சிங், தபேலா போன்ற வாத்தியங்களை எஸ். சண்முகலிங்கம், ஏ. செல்வரத்தினம், எஸ். வேல்மாறன், எஸ். துரைராசா, எஸ். நாகராசா, எஸ். ராசா, எஸ். தாமோதரநாயகம், பி ரதிரூபன், கே. மயூரன் ஆகியோர் இசைக்கிறார்கள். (ம)

## விளையாட்டுக் கழக சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிக்குரிய விளையாட்டுக் கழகங்கள் இணைந்து தமக்கென ஒரு சம்மேளனத்தை உருவாக்கியுள்ளன.

சுமார் 21 விளையாட்டுக் கழகங்களைக் கொண்ட இப்பிரதேசத்தில் இவ்விளையாட்டுக் கழகங்களை ஊக்குவிக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இச்சம்மேளனத்துக்கு மருதங்கேணி பிரதேச செயலர் திரு. கே. கேதீஸ்வரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (161)

## புனித. அடைக்கல அன்னை திருவிழா

(அரியாலை)

யாழ். ஆஸ்பத்திரி வீதி புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா 30ந் திகதி திங்கட்கிழமை புதிய பங்குத்தந்தை அருட் திரு. ஜே. நீக்கிலஸ் அடிகள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

செப்டெம்பர் 8ந் திகதி புதன்கிழமை யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி அடைக்கல அன்னை திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவு பெறுகிறது. (59)

## இராசிபலன்

**18-08-1998**

**புதன்கிழமை**

**(தமிழுக்கு ஆவணி 02)**

பிரதமை மு. இ. 11-31 வரை, மகம் மு. இ 10-56 வரை, மரணயோகம். இராகு காலம் நண்பகல் 12-05 முதல் 1-35 வரை, சுபநேரம் மாலை 4-35 முதல் 6-05 வரை சுபநாள்.

மேடம்: சகோதர பகை, உடல்நலம் பாதிப்பு, மனவேதனை.

இடபம்: உறவினர் தகராறு, நரம்புத் தளர்ச்சி, குடும்ப பிரிவு.

மிதுனம்: அறிவு மேம்பாடு, காரிய சித்தி, மன மகிழ்ச்சி.

கடகம்: கலங்கும் நினைவுகள், தொழில் குறைவு, பணமுடை.

சிங்கம்: தலைமைப் பதவி, புதியமுயற்சி, எதிர்பாராத லாபம்.

கன்னி: செல்வாக்கு பாதிப்பு, தொழில் கஷ்டம், அமைதிக்குறைவு

துலாம்: தொழில் லாபம், வீட்டில் சுபகாரியம், விருந்துண்ணல்.

விருச்சிகம்: மனத்திருப்தி, உறவினர் சகாயம், பயணம்,

தனுசு, கடும்துயரம், தனிமைப்படல், சுருத்துமோதல்.

மகரம்: கடும்வாதம், தொழில்பகை, பெண்களால் துன்பம்.

கும்பம்: அதிகாரிகள் பாராட்டு, வாக்குவன்மை, குடும்ப மகிழ்ச்சி.

மீனம்: உயர்ந்த அந்தஸ்து, தாய் அன்பு, புத்திரர் பெருமை.

ஜோஸ்யர்

## இன்று

(தெல்லிப்பழை)

புலோலி கிழக்கு உதயதாரகை வித்தியாலய 'அன்புமலர்' பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று 18ம் திகதி பி. ப. 2 மணிக்கு நடைபெறவிருக்கிறது. (160)

## வேலும் மயிலும் துணை

ராகம்: சாம்போதி — தாளம்: ஆதி

**பல்லவி**

வடிவேலும் மயிலும் துணைவருமே - குற
வள்ளி மணவாளன் நல்லைநகர் வாசன்
(வடிவேலும்)

**அநுபல்லவி**

அழகான குறமானும் தெய்வயானை எனும்மானும்
புடைசூழ அடியார்கள் களிகூர வரும் குகன்
(வடிவேலும்)

**சரணங்கள்**

கொடிபாக வருசேவல் அதிகாலை இசைபாட
குழலோசை முழவோசை மறையோசை நிறைவாக
திருவீதி உருவ்வரும் திருநாமம் மொழிவாரும்
கரைகாண முடியாத கடலாக அலைமோத
(வடிவேலும்)

பூமாலை தொடுப்பார்க்கும் புகழ்மாலை
புனைவார்க்கும்
வேலனே நல்லூர்க்குமரா என்றழுவார்க்கும்
ஒராறு முகவா மால் மருகா நின் அருள்தா என்று
ஆராத அன்போடு நாள்தோறும் தொழுவார்க்கும்
(வடிவேலும்)

கவிஞர் சோ. பத்மநாதன்

(இன்று நல்லூர் கந்தன் பூங்காவன உற்சவம்)

அடுக்களைச் சாம்பல் அருமையான பொட்டாஸ்

## அகதி அந்தஸ்து கோரிய
# 19 இலங்கைத் தமிழர்கள் ஜேர்மனியில் தடுத்துவைப்பு

(பேர்லின்)

இலங்கைத் தமிழ் அகதிகளில் 19பேர் ஜெர்மன் பிராங்பேர்ட் விமான நிலையத்தில் தற்போது தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகதி அந்தஸ்து கோரி இவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதை அடுத்து இவர்கள் மேன்முறையீடு செய்துவிட்டு அதன் முடிவுக்காக காத்திருக்கின்றனர்.

இதேவேளை ஜேர்மனிக்கு வரும் வெளிநாட்டு அகதிகளுக்கு சட்ட உதவிகளை வழங்க விமானநிலைய சமூக சேவை அமைப்பு ஒன்று முன்வந்துள்ளது.

இது இவ்வாறிருக்க ஜெர்மனியில் வெளிநாட்டு அகதிகளைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் 3061 வெளிநாட்டவர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (ரி)

# தமிழக சிறைகளில் 3000 ஈழத் தமிழர்

(சென்னை)

தமிழக சிறைகளில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும், சிறப்பு அகதி முகாம்களிலும் பல்வேறு சட்ட ரீதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 63 பேர் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# அரசியல் சட்டத்தை திருத்த நாடாளுமன்ற தெரிவுக்குழு

(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஆலோசனைகள் குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு அரசதரப்பிலிருந்தும் எதிர்க்கட்சித்தரப்பிலிருந்தும் எம். பி.க்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

18 எம். பி.க்களை உள்ளடக்கிய இந்த தெரிவுக்குழுவின் தலைவராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா செயற்படுவார்.

அரச தரப்பைச் சேர்ந்த 10 எம். பிக்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த 8 எம். பிக்களும் இந்தக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (கி)

## ★ வெளிநாட்டு நிறுவன உதவிகள்
# அரசினால் துஷ்பிரயோகம்!
## நிறுத்தப் போவதாகவும் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்கென வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகள் அரசினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருவதாக உதவி வழங்கும் நிறுவனங்களுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கென உலக நாடுகள் வழங்கும் உதவி நிதிகள் அரச பாதுகாப்புச் செலவினங்களுக்காக பயன்படுத்தி வருவது தொடர்பாக கிடைத்த புகாரைத் தொடர்ந்து உலக வங்கி அதிகாரிகள் கொழும்பில் விசாரணை ஒன்றை மேற்கொண்டனர்.

இதே போல ஏனைய உதவி வழங்கும் நிறுவனங்களும் இது தொடர்பான விசாரணையை மேற்கொள்ள இருப்பதுடன் தமது உதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் இலங்கைக்கான உதவிகளை நிறுத்த வேண்டிவரும் என்றும் அவை எச்சரித்துள்ளன. (கி)

# சிங்கப்பூர் தொ. கா. குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து தொலைக்காட்சி குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார நிலைகள் குறித்து பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் விதமாக இந்தக் குழு இங்கு வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழு பல அரசியல் தலைவர்களையும், பொருளாதார நிபுணர்களையும் சந்தித்து பல்வேறு பேட்டி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்த இக்குழு அவரது பேட்டி நிகழ்ச்சி ஒன்றையும் ஒளிப்பதிவு செய்தது. (இ - ரி)

## புலமைப் பரீட்சை
(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கஷ்டநிலை அண்மையில் ஏற்பட்டது

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையின்போதும் கடும் மழையின் மத்தியிலும் அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தைக் கடந்து வெகு தூரத்திலுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத வேண்டிய அவலநிலை மாணவர்களுக்கு ஏற்பட்டதும் தெரிந்ததே. (163-கி)

## போரைத்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராக போரிட்டு வருவது குறிப்பிடத்தக்கது

கடந்த பத்து ஆண்டுகளில் இராணுவத்தின் பலம் பத்து மடங்குகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் புலிப் போராளிகளுக்கு எதிராக போரிட இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைவு என ராணுவ விமர்சகர்கள் கூறுகின்றனர்.

தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடாத அணிகளில் உள்ள சிப்பாய்களையும் மேலும் புதிதாக நியமனம் பெறும் சிப்பாய்களையும் சேர்த்து இந்தப் புதிய அணிகளை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் வசமுள்ள பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கமாகவே இந்தப் பத்து அணிகளும் அமைக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இந்தத் திட்டத்தின்கீழ் புதிதாக இராணுவத்துக்கு சேர்த்துக்கொள்ளப்படுவோருக்கு பயிற்சிகளை வழங்குவதற்கென புதிதாக பல பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இ-ரி

## ஜனாதிபதி
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ள நாடாளுமன்றத் தேர்தலை அதற்கு முன் நடத்தி, இந்தத் தேர்தல் மூலம் தெரிவாகும் எம். பி.க்களின் வாக்குகளைக் கொண்டு புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதே ஜனாதிபதியை எம். பி.க்கள் தமது மேலதிக வாக்குகள் மூலம் பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரமும் எம். பி.க்களுக்கு வழங்கும் விதமாக அரசியலமைப்பில் மற்றும் ஒரு திருத்தமும் கொண்டு வரப்படும். -இ-ரி

## பாரிய
(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ளும்வரையில், புலிகளுடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளையோ, பேச்சு வார்த்தைகளையோ மேற்கொள்வதில்லை என்றும் அரசு உறுதி எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில், கிழக்குப் பகுதியில் மேலதிக இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக ஜனக பெரேரா நியமிக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். இ-ரி

## பயிற்சி வகுப்பு

(கொழும்புத்துறை)

பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான முதலுதவிப்பயிற்சி நெறி எதிர்வரும் 23 ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 27ம் திகதி வெள்ளிக்கிழமை வரை யுனிசெப் உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்றத்தின் ஆதரவில் நடைபெறும்.

மேற்படி ஐந்துநாள் பயிற்சி நெறி யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெறும். (154)

## ராணுவ
(1ம்பக்கத் தொடர்ச்சி)

குறித்து அரசுத் தரப்பு அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகளுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இராணுவத்தைப் பலப்படுத்துவதற்குத் தேவையான இராணுவ உபகரணங்களுக்குரிய பட்டியலைத் தருமாறு இராணுவ அதிகாரிகளை அரசு அதிகாரிகள் இந்தச் சந்திப்பின்போது கேட்டுள்ளனராம்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலமிழக்கச் செய்யும் நோக்கத்துடனும், அதே நேரத்தில் அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் திட்டத்துடனும் இந்த இராணுவ-அரசியல் நடவடிக்கை அமுல் நடத்தப்பட உள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ளப் படையினர் தொகை போதாதென இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்தை அரசு அதிகாரிகள் இந்தச் சந்திப்பின்போது ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. -இ

# ஐ. தே. க. கொலைகாரர்களையும் அரசியலில் புகுத்தியுள்ளது

(கொழும்பு)

"நாட்டில் பயங்கரவாதத்தை ஏற்படுத்தி ஆட்சி செய்கின்ற ஐ.தே.க. அரசு அரசியல் இலாபத்திற்காக கொலைகாரர்களையும் அரசியலில் புகுத்தியுள்ளது." இவ்வாறு சமசமாஜக்கட்சி எம். பி. அத்தாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார். வடக்கு-கிழக்கு யுத்தத்தைப் பொறுத்தவரை ஆட்சியாளர்கள் பிரபாகரனை தம்பக்கத்திற்கு இழுத்துக்கொள்ளப் பார்க்கிறார்களே தவிர தமிழ் மக்களுக்கு விமோசனம் பெற்றுத்தர முயலவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். -ரி

## கொழும்பில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் விடுதலை செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களின் விடுதலை தொடர்பாக கொழும்பு மாவட்ட எம். பியும் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி மேலிடத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (ரி)

## போர்த்தளபாடம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டமிட்டு நோட்டமிட்டு வருகின்றன.

ஹெலிகொப்டரில் இருந்து நேற்று யாழ். குடாவின் பல பகுதிகளிலும் படையினரால் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன யாழ் குடா மீது தாக்குதல் நடத்தவிருப்பதாக அந்தத் துண்டுப்பிரசுரத்தில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. -ரி

## காவலரண்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 7-20 மணியளவில் பண்டத்தரிப்பு இளவாலை பகுதிகளிலுள்ள இராணுவக் காவலரண்களுக்குப் பின்னால் அமைந்திருக்கும் இராணுவ விடுதிகள் மீதும் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினார்கள்.

இதனையடுத்து அப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பீரங்கி மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதல்களையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

வசாவிளானிலும், பண்டத்தரிப்பிலும் புலிகள் நடத்திய ஷெல் தாக்குதல்களினால் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் பற்றித் தெரியவில்லை. (ரி)

## இனப் பிரச்னை
(1ம் பக்கத் தொடர்ச்சி)

இனப் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண்பது சாத்தியம் என்பதை உணரத் தவறப்பட வேண்டும். இன்றேல் துன்பங்கள் தான் தொடரும். வடக்கு-கிழக்கு இணைப்புடன் கூடிய சமஷ்டி ஆட்சி முறை, பெரும்பான்மை மக்களுக்கு பேரபாயமாகவே இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

எமது ஜனாதிபதி பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்னையைத் தீர்க்கத் தயாராக இருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியும் அதனையே விரும்புகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். -ரி

## ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஆகிய பகுதிகளை நேற்றுகாலை ஹெலிகொப்டர் ஒன்று வட்டமிட்டு 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது. (ரி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

பொது எழுது வினைஞர் தரம் II க்கு பதவி உயர்வுப் பரீட்சை - 1993க்குரிய பயிற்சி வகுப்புகள் இன்று மாலை 3-00 மணியளவில் யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பலவந்த
(1ம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதமிருந்த 50 கைதிகளும் ஐந்து 100 அடி உயரமான தண்ணீர்த்தாங்கி ஒன்றின் மேல் ஏறி உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தனர்.

இவர்களுக்கு அவர்களது உடல் நிலைமை குறித்து அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்ட பின்னர் அவர்களும் உண்ணாவிரதத்தைக்கைவிட்டு கீழிறங்கி வந்தனர். (இ-ரி)

## உன்னிச்சை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளும், ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் திடீரென எதிர்ப்பட்டவேளையில் இம்மோதல் நிகழ்ந்தது.

இம்மோதலில் வீர வேங்கை கமல்ராஜ் அல்லது கமல் (ஆனந்தன் சிவகுமார், மன்னம்பிட்டி), வீர வேங்கை தேவநீதன் (அருளம்பலம் சுதர்சன், களுவாஞ்சிக்குடி) ஆகிய இரண்டு போராளிகள் வீரச் சாவு அடைந்தனர். இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/B